கால்நடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

# மீன்வளம்

## மானியக் கோரிக்கை எண் : 7

அறிவிப்புகள்
2016 - 2017


**D.ஜெயக்குமார்**
மீன்வளத்துறை அமைச்சர்

## 1. சேலம் மாவட்டம் மேட்டூர் அரசு மீன் பண்ணையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் அமைந்துள்ள அரசு மீன்பண்ணை, தமிழ்நாட்டின் பிரதான மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு மையமாகத் திகழ்கிறது. இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் இந்திய பெருங்கெண்டை மீன்குஞ்சுகள், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த மீன் பண்ணையின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 3 கோடியே 37 இலட்சம் ரூபாய்** செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

## 2. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் மீனவர்களிடமிருந்து மீன்களை நேரடியாக கொள்முதல் செய்து தரமான மீன்களை பொதுமக்களுக்கு நியாயமான விலையில் வழங்கிட நவீன மீன் விற்பனை நிலையங்கள் அமைத்தல்

மீனவர்களிடமிருந்து நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்ட தரமான மீன்களை, பொதுமக்களுக்கு நியாயமான விலையில் வழங்கிடவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் உறுப்பினர் சங்கங்களின் மீன் வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்திடவும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாட்டில் 10 நகரங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் மொத்தம் **1 கோடி ரூபாய்** செலவில் நிறுவப்படும். இந்த மீன் விற்பனை நிலையங்களை உறுப்பினர் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்று நடத்தும்.

## 3. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களை பராமரிக்கும் மேலாண்மைக் குழுக்களுக்கு பனிக்கட்டி தூளாக்கும் இயந்திரங்கள் (Ice Crushing Machines) மற்றும் எடை பார்க்கும் கருவிகள் (Weighing Scales) வழங்குதல்

பனிக்கட்டி தூளாக்கும் இயந்திரங்கள் (Ice Crushing Machines) மூலம் பனிக்கட்டிகள் சுகாதாரமான முறையில், சிறு துகள்களாக நொறுக்கப்பட்டு, பிடிக்கப்பட்ட மீன்களின் மீது தூவப்படுவதால், மீன்களின் தரம் சிறப்பான முறையில் பாதுகாக்கப்படுகிறது. மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீன்களை எடைபார்த்து, சரியான முறையில் விற்பனை செய்திட மீன் எடை பார்க்கும் கருவிகள் (Weighing Scales) தேவைப்படுகின்றன.

எனவே, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாட்டிலுள்ள **6** மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் **35** மீன் இறங்குதளங்களுக்கு, **75** பனிக்கட்டி தூளாக்கும்

இயந்திரங்களும், **59** மீன் எடை பார்க்கும் கருவிகளும் **67 இலட்சம் ரூபாய்** செலவில் வழங்கப்படும். பனிக்கட்டி தூளாக்கும் இயந்திரமும், எடைபார்க்கும் கருவியும் அந்தந்த மீன்பிடி துறைமுகம் / மீன் இறங்குதள மேலாண்மைக் குழுவால் பராமரிக்கப்படும்.

## 4. சிறப்பாக செயல்படும் மீன்பிடி துறைமுகம் / மீன் இறங்குதள மேலாண்மைக் குழுக்களுக்கு விரைவு சரக்கு வாகன வசதி ஏற்படுத்தித் தருதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் மீன்பிடி துறைமுக / மீன் இறங்குதள மேலாண்மைக் குழுக்களின் பணி சிறப்பிற்கு ஊக்கம் அளித்திடும் வகையில், மீன்கள், பனிக்கட்டி, உப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்ல வசதியாக, **1 கோடியே 50 இலட்சம் ரூபாய்** செலவில் 25 விரைவு சரக்கு வாகனங்கள் வழங்கப்படும்.

## 5. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பின் கீழ் உள்ள ஆழியார், அமராவதி மற்றும் திருமூர்த்தி மீன் பண்ணைகளுக்கு பறவைகள் தடுப்பு பாதுகாப்பு வேலி அமைத்தல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆழியார் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி மற்றும் திருமூர்த்தி மீன் பண்ணைகளில், பறவைகள் மீன் குஞ்சுகளை சேதப்படுத்துவதை தவிர்க்க, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 55 இலட்சம் ரூபாய்** திட்ட மதிப்பீட்டில் பண்ணைகளின் மேற்பரப்பில் பறவைகள் தடுப்பு பாதுகாப்பு வேலி அமைக்கப்படும்.

## 6. மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 10வது மற்றும் 12வது வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் ரொக்கப்பரிசுத் தொகையை உயர்த்தி வழங்குதல்

தமிழகத்தில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், பள்ளிக் கல்வியில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில், மாவட்ட மற்றும் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ/ மாணவியருக்கு, சான்றிதழ்களுடன் ரொக்கப் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ரொக்கப் பரிசுத் தொகை, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**, நடப்பாண்டில் உயர்த்தி வழங்கப்படும்.

உயர்த்தி வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகை, மாநில அளவில் 12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவ மாணவியருக்கு முறையே **50,000/–** ரூபாய், **30,000/–** ரூபாய்,

20,000/–ரூபாய் எனவும், மாநில அளவில் 10ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவ மாணவியருக்கு முறையே 25,000/–ரூபாய், 20,000/– ரூபாய், 15,000/–ரூபாய் எனவும், மாவட்ட அளவில் 12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவ மாணவியருக்கு முறையே 6,000/– ரூபாய், 4,000/– ரூபாய், 2,000/–ரூபாய் எனவும் மற்றும் மாவட்ட அளவில் 10ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவ மாணவியருக்கு முறையே, 3,000/–ரூபாய், 2,000/– ரூபாய், 1,000/–ரூபாய் எனவும் ரொக்கப் பரிசுத் தொகையாக வழங்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்த அரசுக்கு **16 இலட்சம் ரூபாய்** செலவாகும்.

## 7. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இணையதளம் மற்றும் தொலைபேசி வழியாக மீன் உணவுகளை விற்பனை செய்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**, சென்னை பெரு நகரத்தின் பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில், சோதனை அடிப்படையில் இணையதளம், தொலைபேசி மற்றும் அலைபேசி–குறுந்தகவல் மூலம் நுகர்வோர்கள் தொடர்பு கொள்ளும் பட்சத்தில், அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று மீன் உணவுகளை விற்பனை செய்திட, **30 இலட்சம் ரூபாய்** செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மீன் உணவு விற்பனை மேற்கொள்ளப்படும்.

**D.ஜெயக்குமார்**
மீன்வளத்துறை அமைச்சர்